பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

11 12 2024 6 45

<u>தலைப்புச் செய்திகள்-</u>

1. மகாகவி சுப்ரமணிய பாரதியாரின் இலக்கிய படைப்புக்களின் தொகுப்பை பிரதமர் திரு நரேந்திரமோடி இன்று புதுதில்லியில் வெளியிடுகிறார்.
2. மகளிர் தொழில் முனைவோரை உருவாக்கும் வகையில் 73 ஆயிரத்து 151 ஸ்டார்ட்-அப் நிறுவனங்களுக்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டள்ளதாக மத்திய தொழில்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.
3. மாநில அரசுகளின் ஒப்புதல் இல்லாமல் எந்த ஒரு திட்டத்தையும் மத்திய அரசு நிறைவேற்றாது என்று மத்திய சுரங்கத்துறை அமைச்சர் திரு கிஷன்ரெட்டி தெரிவித்துள்ளார்.
4. வங்கக்கடலில் உருவாகியுள்ள ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி காரணமாக டெல்டா மற்றும் கடலூர், புதுக்கோட்டை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழைக்கு வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
5. இந்தியா – ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையேயான மகளிர் மூன்றாவது மற்றும் கடைசி ஒருநாள் கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

மகாகவிசுப்ரமணிய பாரதியாரின் இலக்கிய படைப்புக்களின் தொகுப்பை பிரதமர் திரு நரேந்திரமோடி இன்று புதுதில்லியில் வெளியிடுகிறார்.

சுப்ரமணிய பாரதியாரின் 143-வது பிறந்த நாளையொட்டி பிரதமர் இல்லத்தில் ஏற்பாடு செய்துள்ள நிகழ்ச்சியில் 23 தொகுதிகள் கொண்ட தொகுப்பை அவர் வெளியிடவுள்ளார்.

மகாகவி பாரதியாரின் படைப்புக்களை சீனி விஸ்வநாதன் தொகுப்பாக தயாரித்துள்ளார்.

நாட்டு விடுதலைக்கான வேட்கையையும், இந்திய கலாச்சாரத்தையும், பாரம்பரியத்தையும் தமது பாடல்கள் மூலமாக மகாகவி பாரதி மக்களிடையே கொண்டு சேர்த்துள்ளார்.

மகாகவி பாரதியாரின் பிறந்த நாளையொட்டி சென்னை மெரினா கடற்கரையில் உள்ள அவரது சிலைக்கு மாநில அரசு சார்பில் இன்று மரியாதை செலுத்தப்படுகிறது.

**[]<<<>>>[]**

மகளிர் தொழில் முனைவோரை உருவாக்கும் வகையில் 73 ஆயிரத்து 151 ஸ்டார்ட்-அப் நிறுவனங்களுக்கு மத்திய அரசு அங்கீகாரம் அளித்துள்ளதாக மத்திய வர்த்தக மற்றும் தொழில்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்த நிறுவனங்களின் இயக்குநர் குழுவில் குறைந்பட்சம் ஒரு பெண் இருப்பதை மத்திய அரசு உறுதிப்படுத்தி உள்ளதாக அமைச்சகத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

நாட்டின் பொருளாதார வளர்ச்சியிலும், புத்தாக்க முயற்சியிலும் மகளிர் முக்கிய பங்காற்றுவதை இது எடுத்துக்காட்டுவதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மகளிரை தலைமையாகக் கொண்ட பல்வேறு முன்னோடி திட்டங்களை மத்திய அரசு அமல்படுத்தி வருவதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது.

மாற்று முதலீட்டு நிதியின் கீழ் மகளிரை நிர்வாகியாகக் கொண்ட 149 ஸ்டார்ட்-அப் நிறுவனங்களில் அரசு மூவாயிரத்து 107 கோடி ரூபாயை முதலீடு செய்துள்ளதாக அமைச்சகம் கூறியுள்ளது.

கடன் உத்தரவாத திட்டத்தின் கீழ் கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் இதுவரை மகளிரை தலைவராகக் கொண்ட நிறுவனங்களுக்கு சுமார் 24 கோடி ரூபாய் கடனுதவி வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சகத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

**[]<<<>>>[]**

மாநில அரசுகளின் ஒப்புதல் இல்லாமல் எந்த ஒரு திட்டத்தையும் மத்திய அரசு நிறைவேற்றாது என்று மத்திய சுரங்கத்துறை அமைச்சர் திரு கிஷன்ரெட்டி தெரிவித்துள்ளார்.

மதுரை மாவட்டம் மேலூர் அருகே நாயக்கர்பட்டியில் டங்ஸ்டன் சுரங்கம் அமைப்பதை கைவிடக்கோரி விடுதலை சிறுத்தைள் கட்சியின் தலைவர் திரு தொல் திருமாவளவன் நேற்று புதுதில்லியில் அமைச்சரை சந்தித்து வலியுறுத்தினார்.

இது தொடர்பாக தமிழக சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் தமது பார்வைக்கு வந்துள்ளதாக கூறிய அமைச்சர், தமிழக மக்களின் கோரிக்கைக்கு மத்திய அரசு ஆதரவு அளிக்கும் என்றும் அவர் தெரிவித்ததாக திரு தொல் திருமாவளவன் தமது சமூக வலைதளப்பதிவில் கூறியுள்ளார்.

**[]<<<>>>[]**

தமிழகத்தில் 2026-ஆம் ஆண்டு பிஜேபி தலைமையில் கூட்டணி ஆட்சி அமையும் என்று அக்கட்சியின் மாநில தலைவர் திரு அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

நாகப்பட்டினத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், கூட்டணி ஆட்சியில் அனைத்து சமுதாயத்தினருக்கும் சம வாய்ப்பு அளிக்கப்படும் என்று கூறினார்.

திமுக ஆட்சியில் ஒப்பந்தப்புள்ளி கோருபவர்கள் யார், அவர்கள் எத்தனை முறை ஒப்பந்தப்புள்ளி கோரியிருக்கிறார்கள் என்ற விவரங்களை பிஜேபி அறிக்கையாக வெளியிட உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மதுரை அருகே நாயக்கர்பட்டியில் டங்ஸ்டன் சுரங்கம் திட்டம் தொடர்பாக தாமும், மத்திய இணை அமைச்சர் டாக்டர் எல் முருகனும் மத்திய கனிமவளத்துறை அமைச்சர் திரு கிஷன் ரெட்டியை நாளை சந்தித்து பேச இருப்பதாக அவர் கூறினார்.

மக்கள் விரும்பாத எந்த திட்டத்தையும் மத்திய அரசு செயல்படுத்தாது என்றும் திரு அண்ணாமலை குறிப்பிட்டார்.

**[]<<<>>>[]**

குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் தொடர்பாக பள்ளிக் குழந்தைகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் நிகழ்ச்சி திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி நகராட்சி அரசினர் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்ட மாவட்ட ஆட்சியர் திரு பிரபு சங்கர், குற்றங்கள் நிகழ்ந்தால் அது தொடர்பாக பெண் குழந்தைகள் துணிச்சலாக புகார் தெரிவிக்க அவர்களை தயார்படுத்தவே இத்தகைய நிகழ்ச்சிகள் நடத்தப்படுவதாகக் கூறினார்.

*( சவுண்ட்பைட் - பிரபுசங்கர் ) ---50 செகண்ட்*

**[]<<<>>>[]**

தென்கிழக்கு வங்கக்கடலில் உருவாகியுள்ள ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி காரணமாக தமிழகத்தில் அநேக இடங்களில் அடுத்த இரண்டு நாட்களுக்கு மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு செந்தாமரைக் கண்ணன் தெரிவித்துள்ளார்.

டெல்டா மாவட்டங்கள், கடலூர், புதுக்கோட்டை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழைக்கு வாய்ப்பு உள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

*( சவுண்ட்பைட் - செ க ) --38--- செகண்ட்*

கனமழை எச்சரிக்கையை அடுத்து மயிலாடுதுறை மாவட்டத்தில் பள்ளி கல்லூரிகளுக்கு இன்று விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

திருவண்ணாமலை அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோவில் திருக்கார்த்திகையின் திருவிழாவின் ஒரு பகுதியாக நேற்று தேரோட்டம் வெகு விமரிசையாக நடைபெற்றது.

இதில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு தேரை வடம்பிடித்து இழுத்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*( வாய்ஸ்பைட் - ரவிச்சந்திரன் ) --42---- செகண்ட்*

**[]<<<>>>[]**

ஹாங்காங் விவகாரங்களில் தலையிடும் அமெரிக்கர்களுக்கு விசா கட்டுப்பாடுகளை விதிக்கப்போவதாக சீனா அறிவித்துள்ளது.

**[]<<<>>>[]**

சிரியாவில் ஆட்சிமாற்றம் ஏற்பட்டுள்ள நிலையில் கடந்தகால அரசைப்போலவே புதிய அரசும் ஈரானுடன் உறவுகளை பராமரித்தால் மோசமான விளைவுகளை சந்திக்க வேண்டியிருக்கும் என்று இஸ்ரேல் எச்சரித்துள்ளது.

**[]<<<>>>[]**

சிரியாவில் இந்தியர்கள் அனைவரும் பாதுகாப்பாக இருப்பதாகவும், வெளியேற விரும்புவோருக்கு விமான சேவை தயாராக இருப்பதாகவும் வெளியுறவுத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

**[]<<<>>>[]**

உத்திரபிரதேச மாநிலத்தில் கடும் குளிரால் அவதிக்குள்ளாகும் சாலையோர மக்களை அம்மாநில முதலமைச்சர் திரு யோகி ஆதித்யநாத் சந்தித்து போர்வைகளை வழங்கினார்.

**[]<<<>>>[]**

சாகர்மாலா திட்டத்தின் கீழ் தமிழகத்தில் ஆயிரத்து 240 கோடி ரூபாய் மதிப்பிலான 22 திட்டப் பணிகளுக்கு நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

**[]<<<>>>[]**

ஈரோடு மாவட்டம் பவானிசாகர் அணையிலிருந்து அரக்கன்கோட்டை மற்றும் தடப்பள்ளி வாய்க்கால் பகுதிகளுக்கு இன்று முதல் பாசனத்திற்கு தண்ணீர் திறந்துவிட மாநில அரசு உத்தரவிட்டுள்ளது.

**[]<<<>>>[]**

நாமக்கல் அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூாயில் இந்திய செஞ்சிலுவை சங்கத்தின் சார்பில் தன்னார்வலர்களுக்கான மாநில அளவிலான பயிலரங்கம் நேற்று நடைபெற்றது.

**[]<<<>>>[]**

தூத்துக்குடி மாவட்டம் கருங்குளம் ஊராட்சி ஒன்றியம் சேதுராமலிங்கபுரத்தில் 516 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்பட்டு வரும் கூட்டு குடிநீர் திட்டப்பணியை ஆட்சியர் திரு கே இளம் பகவத் நேற்று ஆய்வு செய்தார்.

**[]<<<>>>[]**

காஞ்சிபுரம் மாநகராட்சிக்கு உட்பட்ட காந்திநகர் நியாயவிலைக் கடையை ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன் நேற்று ஆய்வு செய்தார்.

**[]<<<>>>[]**

சென்னை வியாசர்பாடியில் பல்வேறு குற்றங்களில் தொடர்புடைய குற்றவாளியை சுட்டுப்பிடித்த தனிப்படை காவல்துறையினரை சென்னை பெருநகர காவல்துறை ஆணையர் திரு அருண் நேரில் அழைத்து பாராட்டினார்.

**[]<<<>>>[]**

இந்தியா – ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையேயான மகளிர் மூன்றாவது மற்றும் கடைசி ஒருநாள் கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

பெர்த்தில் இப்போட்டி இந்திய நேரடிப்படி காலை மணி 9-50-க்கு தொடங்குகிறது.

ஏற்கனவே நடந்த இரண்டு போட்டிகளிலும் ஆஸ்திரேலியா வெற்றிபெற்று இரண்டு — பூஜ்ஜியம் என்ற புள்ளி கணக்கில் முன்னிலையில் உள்ளது.

[]<<<>>>[]

ஐ எஸ் எல் கால்பந்து போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் சென்னை அணி — ஹைதராபாத் அணியை எதிர்கொள்கிறது.

சென்னையில் இப்போட்டி இரவு மணி 7-30-க்கு தொடங்குகிறது.

[]<<<>>>[]

ப்ரோ கபடி லீக் போட்டியில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் ஜெய்ப்பூர் அணி 42-29 என்ற புள்ளி கணக்கில் குஜராத் அணியை வென்றது.,

மற்றொரு போட்டியில் பெங்கால் அணி 44-29 என்ற புள்ளி கணக்கில் பெங்களூரு அணியை தோற்கடித்தது.

இன்று நடைபெறும் ஆட்டங்களில் ஹரியானா — பெங்களூரு அணியையும், தமிழ்நாடு — மும்பை அணியையும் எதிர்கொள்கின்றன.